# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௲௯௯௪ | மலர் |
|---|---|---|
| ௩௯ | சோபகிருது, மார்கழி. | ௯. |
| | 1963 நவம்பர், டிசம்பர். | |


## பூசல் தோற்க!

புலவர். தி. நா. அறிவு ஒளி

தமிழகத்தில் அன்றும் இன்றும் அரசியல் குழப்பம்—அரசியல் வெறி—முறையற்ற வகையிலேயே அமைந்துள்ளது. எல்லா நாட்டு வரலாற்றிலும் அவ்வந் நாட்டாரே தமக்குள் பூசலிட்டுக் கொண்டமை இயல்பாகவே உள்ளது. ஆயின், அப்பூசலும் போராட்டமும் அந்நாட்டு நல்வளர்ச்சியைக் கெடுக்காத வகையில் தற்காத்து வந்துள்ளனர். தனிப்பகை—போராட்டம்—இவற்றைக் கடந்த, ஒரு பொது ஒற்றுமையுணர்வைக் கடைப்பிடித்து நாட்டு நலன்—மன்பதை நலன்—என இவற்றை ஓம்பியுள்ளனர். ஆனல், நம்நாட்டில்?......

கட்சிகளின் அரசியல் பூசல்களும், பிணக்குகளும்; இவற்றால் விளையும் தீமைகளும் மண்டி மலிந்திருப்பதை அறிவோம். 'ஒரு மன இயக்கம்' தமிழர்க்கு நனி இன்றியமையாததாம். இதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். கட்சியால்—கொள்கையால்—வேறுபட்டவர்களும்; சில பொதுச் செயல்களில் ஓரணியாக அமைய வேண்டும். அவ்வாறு திரளும்போது செயற்கை நடிப்பாக இருக்காமல், இயற்கையுணர்வோடு திரள வேண்டும்.

'கூட்டுறவு' பல துறைகளில் செழித்தால்தான் நாட்டின் பொது வாழ்வு பொலிவு பெறும் என்ற உண்மையை அழுத்தமாகத் தமிழர் உணரவேண்டும்.

அரசியலில் 'பிள்ளைத் தன்மைப் பேதைமை' தலை விரித்தாடுவது, நாட்டில் ஊழலும் கேடும் பெருக்கும். கருத்து வேற்றுமைகள் இருக்க வேண்டியதுதான். அவ்வாறிருப்பது இயல்பே. ஆயின், அதற்காகத் தனித்தனிக் குழுக்களும், கூட்டுகளுமாகத் தமிழர் 'பாதரசத் துளிகளாக' உடைபட்டுச் சிதறுவது கூடாது. இங்ஙிலை பொது வாழ்வுக்கும் தனி வாழ்வுக்கும் கேடு பயக்கும்.

பிரிந்து பிரிந்து, விலகி விலகிச் சென்று கொண்டிருப் பதே தமிழர் முன்னேற்றத்திற்குப் பெருந் தீங்கு பயக்கும். தமிழருக்குப் பிறரால் விளையும் தீமையை விடத் தமிழருக்குத் தமிழராலே விளையும் தீமை அஞ்சத் தக்கதாக இருக்கும்.

கருத்தளவில் வேறுபட்டவர்களும், நாடு, மொழி, இனம், நாகரிகம், பண்பாடு, ஒழுக்கம், கலை, மரபு, குடிநலம், அக வாழ்வு, பொதுநலம் ஆகியவைபோன்ற துறைகளில் பகைமை யின்றி ஒன்றுபட்டுக் கூடி மகிழ்வோடு ஒருமுகமாக ஒத் துழைக்கும் பண்பாடு செழிக்க வேண்டும்.

பிணைந்து பிணைந்து, இணைந்திணைந்து, ஒன்றி ஒருமித்துப் பகை நீக்கி உறவோம்பி, வளர்ந்து வாழும் மாண்பார் ஒழுக் கம் மன்பதை வாழ்வில் சிறக்க வேண்டும்;

சிரிக்கின்ற முகங்கள் சிலவாக இருக்கக் கூடாது; பல வாக வேண்டும். நோய்கொண்ட உள்ளங்கள் இல்லாத வீடும் நாடுமே சிறப்புடையது. நேற்றைய பெருமையோடு, இன்றைய-நாளைய வாழ்வின் வெற்றி மேம்பாடும் சிறப்பார்வ முயற்சியும் மிக வேண்டும்.—என்ற இக்கொள்கை மக்கள் பேச்சிலும் எழுத்திலும் மட்டுமின்றி உள்ளத்திலும் ஒழுக்கத் திலும் செழிக்க வேண்டும். தனிவாழ்வைச் செம்மை படுத்து வதே பொதுவாழ்வுச் செம்மையை உருவாக்கும்.

தனித்தன்மை, உரிமையியல்பு, தன்னேக்கம் ஆகியவற் றுக்கும், ஆய்வு மனப்பான்மைக்கும் போதிய வரவேற்பு நாட்டில் செழிக்கவில்லை. பின்பற்றுதல், போலச் செய்தல், கண்மூடிப் பழக்கம், நம்பி நடத்தல் போன்றவையே மிகுந்து வருகின்றன. இது எவ்வளவு தவருனது என்பதை மக்கள் உணரவில்லை.

பழிப்பது, இழிப்பது குற்றங்குறை கூறிச் செருக்குவது ஆகிய செயல்களைச் செய்பவர்கள் இரக்கப்படுதற்குரிய அறி யாமை வாய்ந்தோராவர். அவர்களுக்கு இரக்கப்படுவதைத் தவிர, வேறு என்ன செய்ய முடியும்? திருத்த முயன்ருலும் அவ்வியல்பை மாற்றிக்கொள்வார்களா? அத்தகையோர் என் பது ஐயப்பாட்டிற்குரியதே. ‘பிறருள்ளம் தன்னுள்ளம் போன்றதே’ என்றுணரும் உணர்ச்சியே ஒரு பெருங்கலையாம். கலைகட்குள்ளேயே ஒப்பற்ற சிறந்த கலை இதுவே. இக்கலை யுணர்வு வாய்த்துவிட்டால் அவர்களைவிடப் பேறு பெற்ருேர் யாருளர்?

அறிவியல் உலகைச் சுருக்கிடப் பாடுபடும்போது, அர சியல் உலகைச் சிறுத்திடச் செய்கிறது போலும்! ஆராய்ச்சி உலகில் பொதுநலனை உருவாக்கிவிட முற்படும்போது, அர சியல் நாடுகளுக்கிடையே சுவர் எழுப்பித் தடைகளை உரு

# சுந்தரனார் செந்தமிழ்ப் பற்றும் சீரிய பணியும்

மது. ச. விமலானந்தம், எம். ஏ.,

திராவிடநாடு எனப் பாடியுள்ளமையும், அக்கூற்று இன்று பெருஞ் சான்றாக இயம்பப்பட்டு வருகின்றமையும் கவனிக்கத் தக்கது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் எனும் ஐந்து மொழிகளும் வழங்கு இடமாதலின் இது திராவிட நாடு என்று அழைக்கப்படுவதாகக் கூறுவர்; சிலர் வேறு விதமாகவும் விளம்புவர்.

இனி, தமிழைத் தெய்வமாக்கியவர் அத் தெய்வத் திறத்தினைச் சுட்டு மாற்றான் பரம் பொருளோடு பொருத்தியும் காட்டுகின்றார்.

"பல்லுயிரும் பலவுலகும் படைத்து அளித்துத்
துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்

தமிழும், ஆக்கியும் அளித்தும் அழித்தும் அமைவதாகச் செப்புகின்றார். எல்லையில்லாத பரம் பொருள் உயிர் பலவற்றையும் உலகு சிலவற்றையும் படைக்கிறது; அதுபோன்றே மக்கள் பல்லோர்க்கு முற்காலந் தொட்டே சொற்பொருள் தந்துளாள் தமிழன்னை. எனவே, அவள் பலமொழியாம் நங்கையர்க்குத் தாயெனத் திகழ்கின்றாள். இதனால் இவளது தாய்மைநிலை தெளியலாம்; படைத்தற் றிறம் உணரலாம். இதனையே நாவலர் பாரதியும், 'என்றுமுள தென்தமிழ்போல் பரம் பொருள் போல்' என்று இணைத்துக் கூறியுள்ளார்.

'பல்லுயிரும் பலவுலகும் அளித்தல் செய்கின்றது பரம் பொருள்; அப்படியே அருந்தமிழும் பெருங் கருணையால் அருள் புரிந்து பெற்றெடுத்த மொழிகளையும் பிறவற்றையும் பேணி வளர்க்கிறது. கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் போன்ற மொழிகளுக்குப் பாலூட்டி வளர்க்கிறது; இம்மொழிகள் தமிழ்ப்பால் உண்டு தழைத்துச் சிறத்தலால் அன்னை தமிழ் அளித்தல் செய்கிறாள் எனப்பட்டது. தான் பெற்றெடுத்த மொழிகளைத் தாய் பேணி வளர்ப்பதில் வியப்பில்லையன்றோ? அஃது அன்பு காரணமாகச் செய்வதும்—செய்ய

---

வாக்குகிறது. இங்கிலைக்கு என்னவகையில் மக்கள் விளக்கமும்விடையும் காணப் போகின்றனர்? எவ்வாறு இவ்விரு துறைகளின் முரண்பட்ட போக்கைத் தடுத்து நிறுத்தி, ஒரு மனப்பட்ட; ஒருமுகப் படுத்தப்பட்ட இயக்கத்தை அமைக்கப் போகிறார்கள்? இச்சீர்திருத்தமே இன்றைய உலகப் பொதுச்சீர்திருத்தங்களில் இன்றியமையாததாம்

வேண்டுவதுமாகும். ஆனால் பிறமொழிகளைப் போற்றி வளர்த்தாள் என்றால் அது வியப்புக் குரியதுதானே; அதற்கு அருள் அன்றோ வேண்டும். அவ்வருள் காரணமாக வடமொழி போன்ற வேற்றுமொழிகட்கும், அதனை யொட்டிய பிறமாற்று மொழிகட்கும் அளித்தல் செய்துளாள் நந்தமிழன்னை இதனை விரிக்கிற் பெருகும்.

இனிப் பரம்பொருள் அருள் காரணமாகவும் இன்றிமை யாமையின் பொருட்டுத் துடைத்தலும் செய்யுமாப் போல, செந்தமிழும் சில பல மொழிகளைத் துடைத்தனள் எனலாம். நீலகிரிப் பகுதிகளில் இருளரும், குறும்பரும் பேசிவரும் மொழிகள் தமிழினின்றும் தோன்றிய ஒரு மொழியின் அடியாகப் பிறந்தவெனப் பகரப்படுகிறது; அம்மொழி எது வென்று அறிய இயலா நிலையில் உள்ளது; அம்மொழியினை அன்னை அழித்தனள் போலும்! வங்கம், ஒரிசா போன்ற பகுதிகளில் வழங்கும் கூர்க்கு, மாலர் என்ற மொழிகள் தமிழின் பேர்த்திகள் என்று இயம்பப்படுகின்றது; ஆனால் அவற்றைப் பெற்றெடுத்த தாய்கள்—தமிழின் அப்புதல்விகள் இன்று அறியுமாறில்லை. இன்தமிழ் அன்னை அவற்றையும் துடைத் தனளோ! இன்னும் துளுவம் எனும் தமிழ்ப் பெற்றெடுத்த நங்கை, கன்னடம், மலையாளம், தெலுங்கு போன்றனபோல் சிறக்கவுமில்லை; பரவவும் இல்லை; விரிந்து உயரவும் இல்லை. இதற்குக் காரணம் தமிழின் துடைப்பா என்ன?

இதனால் பரம்பொருள் படைத்தல், காத்தல், துடைத் தல் என்ற முத்தொழில் புரியுமாப் போல, அன்னை தமிழும் இம்முத்திறம் உடையளாய் உள்ளமை யுணரலாம். படைத் தலுக்குப் பிரமனும், காத்தலுக்குத் திருமாலும், துடைத்தலுக் குச் சிவனுமாக—அயன், அரி, அரன் மூவர் அமைவர். ஆனால் மூவரும் ஒருவரே! செயலுக்காக முப்பெருங் கடவுளர்; ஆனால் அருந்தமிழோ இப்பெருந் தொழில் மூன்றையும் ஒரு தானேயாகிச் செய்கின்றாள்.

பரம்பொருள் இவ்வளவு செய்தும் முன்இருந்தபடியே அநாதியாய் அழிவில்லாததாய் இருக்கின்றது. இன்தமிழும் முத்திறல் புரிந்தும் மூவாது, அழியாது அன்று இருந்தபடியே இன்றும் இருந்துவருகிறது. இதனால் இன்தமிழின் இறைமை நிலை தெளியலாம். எனவேதான், இறைமையில் தமிழும், இன்தமிழில் இறைமையையும் கண்டு ஏற்றிப் போற்றிச் சென்றனர் செந்தமிழ்ப் புலவரும் சமயப் பெரியாரும்.

அடுத்து மொழி நிலையும் நலனும் நவில்கின்றார் பாருங்கள். உலகில் தொன்மைசால் மொழிகள் தமிழ், பர்சியன், எபிரே யம் எகிப்தியம், கிரேக்கம், இலத்தீன், சமக்கிருதம் போன் றன. இவற்றுள் எபிரேயம், எகிப்தியம், இலத்தீன், கிரேக்

கம், சமத்கிருதம் ஆகியன பேச்சு வழக்கு இழந்தவை. எஞ்சியவை தமிழும் பெர்சியன் மொழியும். பெர்சியன் மொழி பேசுவோர் தொகை ஏறத்தாழ என்பது நூறாயிரத்திற்குமேல் இல்லை என்று இயம்பப்படுகின்றது. தமிழ் பேசுவோர் தொகையோ நான்கு கோடிக்குமேல். இதனால், தமிழ் தொன்மைமிக்கதாயினும் இன்னும் பேச்சு வழக்கு உடைய தாய் உள்ளது உணரலாம்.

அத்தோடு அமையாது, கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு போன்ற மொழிகளைப் பெற்றெடுத்த போதிலும், இன்றும் கட்டுக்குலையாது, எழில் மாறாது. வளமை குறையாது இளமை நலம் கொண்டு செழுமையுடன் இலங்குகின்றது இன்தமிழ். இத்திறத்தினை,

கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா
ளமுந்துளுவும்
உன்னுதரத்து உதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கு அழிந்துஒழிந்து
சிதையாஉன்
சீர்இளமைத் திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே.

என வணங்குகின்றார்.

தமிழன்னையின் வயிற்றில் உதித்தெழுந்த மொழிக் குழவிகள் பல: கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு போன்றன. அவை தாமும் ஒன்று பலவாகப் பெருகின. கன்னடம், பழங் கன்னடம், புதுக் கன்னடம் எனவும்; குடகர் மொழி, படகர் மொழி எனவும் வேறு பிறமொழி நிலைகளைத் தோற்றுவித்துள்ளது. தெலுங்குகூட அச்சதெலுங்கு, மிசிரத் தெலுங்கு எனக் கிளைத்து நிற்றல் காணலாம். இதனைப் போலும் சுந்தரம் பிள்ளை 'உன் உதரத்து உதித்து எழுந்தே ஒன்று பல ஆயிடினும' என்று இயம்பி யுள்ளாரா?

ஆரியம் உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றுதான்; ஆனால் இன்று பேச்சு வழக்கற்று உள்ளது; குறைந்தும் மறைந்தும் சிதைந்தும் சிறுத்தும் போயுளது. ஆனால் அருந்தமிழோ இன்றும் எழுத்து வழக்கும் பேச்சு வழக்கும் கொண்ட பெரு மொழியாகப் பிறங்குகின்றது. ஆனால் வடமொழியோ இயல்பினாலேயே தோன்றி வளராத ஏதுவாலோ என்னவோ நலிந்து மெலிந்து நலமிழந்து வளங் குன்றியுள்ளது. சமத்கிருதம் என்றாலே (சமத்—நன்றாக, கிருதம்—செய்யப் பட்டது); (Sanskrit that which is made) நன்றாகச் செய்யப் பட்டது என்றுதானே பொருள்! ஆனால் அங்ஙனமில்லாது, இன்தமிழ் இயல்பிலேயே தோன்றி இனிதே வளர்ந்து பண்டே இலக்கண இலக்கிய நிலை எய்தியமையால் மாறாது—

மருவாது உளது. இதனை எண்ணித்தான் பேராசிரியரும் 'ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன் சீரிளமைத் திறம் வியந்து வாழ்த்தும்' என்றார், கம்பர், 'என்றுமுள தென்தமிழ்' என்றும்; நாவலர் பாரதியார், 'காதல் வளர் கன்னி' எனவும்; வரகவி பாரதி,

"பாருளெந் நாளுமோர் கன்னிகை யென்னப்
பயின்றிடு வாளெங்கள் தாய்"

என்றும் இயம்பிச் சென்றுளமை இவண் எண்ணுக. மொழி பலவற்றைப் பெற்றெடுத்தாலும், இளமை மாறாது--எழில் குன்றாக் கன்னியாகவே காட்சிதரும் மாட்சி கண்ட சுந்தரனார் இத்திறம் வியந்து—வியந்த வியப்பில் செயல் மறந்து வாழ்த்துகின்றார். இங்கே, 'அகிலாண்ட கோடி ஈன்ற அன்னையே பின்னையும் கன்னி என மறைபேசும் ஆனந்த ரூப மயிலே!' எனும் தாயுமானார் கூற்றை இணைத்து நோக்குக.

இதுவரை இயம்பியவற்றான், அறிவதாவது: தமிழ் 'எத் திசையும் புகழ் மணக்கப் பொலிந்திடும் தெய்வம்' என்பதும்; அவ்வன்னை, பரம்பொருள் போன்றே முத்தொழில் புரிந்து அன்றுதொட்டு இன்றுவரை எழில் உள்ளவளாய் அழிவில் லாதவளாய் விளங்குகின்றாள் என்பதும்; அம்மொழிகள் தாமும் (ஒவ்வொன்றும்) பன் மொழிகளாய்ப் பல்கியபோதும், தாம் ஏனைய பிற (தாய்) மொழிகள் போலாது, என்றும் இளமை நலமும் வளமைச் சிறப்பும் கொண்டு இலங்குகின்ற னள் என்பதும் பெற்றாம். இத்தகு திறமுடைத் தமிழ்த் தெய்வம் வாழ்த்துக்கும் வணக்கத்திற்கும் உரியவள் என்ப தும் உணர்வாம்.

இன்தமிழ் அன்னையை வாழ்த்தினர்; வணங்கினர்; இனி அவள் பெருமை பேசுகின்றார் பாருங்கள்.

உலகில் முக்காற் பகுதி நீர்—கடல்; காற் பகுதி நிலம். அந்நிலத்தின் ஒரு கோடியில் இருந்த அகத்தியனார் கடல் நீரை யெல்லாம் குடித்திட்டார்; ஆனால் கடலையே குடித்த அம்முனி தமிழ்க் கடலைக் குடிக்க இயலாமற் போனது மட்டு மன்று, அதன் கரைகூடக் காணவில்லை; தமிழ் நிலைதெளிய, தமிழ்க் கரைகாண முருகனையும் சிவனையும் குருவாகக் கொள்ள வேண்டி இருந்தது என்றால், தமிழின் பெருமையை என்னென்பது? எனவே இப்பெருங் கடலையும் உவமையாக உரைக்க இயலா ஒண்மையும் உயர்வும் சான்றது தண்டமிழ் என்பது பெற்றாம்.

தமிழின் ஆழமும் அகலமும் இஃதென எண்ண வேண்டா! இறைவனே நக்கீரர் முன் பொருளறியாது—மாற் றம் உரைக்க இயலாது தவிக்க நேர்ந்ததென்றால், இன் தமிழின் இலக்கணப் பெருமை சொல்லாமலே போதரும்.

தமிழின் தொன்மை நிலைமட்டும் என்னவாம். பாரதியார்,

> தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
> சூழ்கலை வாணர்களும்,—இவள்
> என்று பிறந்தவள் என்றுண ராத
> இயல்பின ளாம்எங்கள் தாய்!

என்றியம்பியுள்ளார். இங்கு ஆரியம் வருவதற்கு முன்னமேயே எங்கும் பரவி இருந்த முதுமொழி—மூத்த மொழி தமிழ் என்றால் அதன் தொன்மையினைச் சுட்டவும் வேண்டுமோ?

இன்னும் புனல் வாதில் ஞானசம்பந்தப் பெருமான் விட்ட ஏடு வையையை எதிர்த்து நின்றதன்றே அஃது எதனைக் காட்டுகின்ற தென்றால், கால வெள்ளத்தால் கன்னித் தமிழைக் கவர இயலாது; காலங் கடந்து நிற்கும் ஆற்றல் சான்றது தமிழ் என்பதற்கோர் அறிகுறி என்று அறைகின்றார்.

இறைவனே மறையவர் உருவில் வந்து திருவாசகத்தைத் தாமே விரும்பிக் கேட்டு ஏடெழுதி வைத்துக் கொண்டது எதற்கோ வெனில், உலகே அழிந்துத் தான் மட்டும் தனித்திருக்க நேருங்காலை, இவ்வேட்டின் பாட்டு துணையாக அத் தனிமையைக் கழிப்பதற்காகவே என்கிறார். இறைவனே தனிமை போக்க இன்தமிழின் துணை நாட வேண்டியிருந்த தென்றால், இனிய தமிழின் ஏற்றத்தை இயம்பிடவும் வேண்டுமோ?

இனிச் சங்கப் பலகை செந்தமிழின் பெருமை சாற்றும் தகைமையது; நூல்களின் தகுதிக் கேற்பவும், கற்றறிந்தார் தரத்திற்கு ஒப்பவும் விரிந்து இடங்கொடுத்து விளங்கும் வகையே போல், தமிழும் வளர்ந்து சிறக்குமாற்றான் நூல் வடிவில் விரிந்து கொடுக்கும் என்பதனைக் காட்டுவதாகும் என்கிறார்,

அடுத்து, கலைமகள் கிழக்கு நோக்கி இருக்கிறாள். எனவே, அவளுடைய விழிகள் தென் மொழியும் வட மொழியும் என்று கொண்டால், (அவளது வலதுபுறம் தென்னகத்தின் பக்கல் சாந்துளதால்) வலது விழி தமிழாய் அமைதல் அறியலாம்; ஆனால் நல்லது கெட்டது உணராதோர், வட மொழியே வலது வழியென விளம்பி வசை பெறலாயினர் என முடிவு கட்டுகின்றார்.

பத்துப் பாட்டின் பொருள் வளத்திலும் சொன்னலத்திலும், மூழ்கித் திளைத்தோர், எவ்வாற்றானும் பொருளோடு பொருந்தா இலக்கணமில்லாத வடமொழிக் கற்பனைகளில்

ஈடுபடார் என்றும்; வள்ளுவனாரது எக் காலத்திற்கும்—எவ் விடத்திற்கும்—எவருக்கும் பொருந்துவதாய திருக்குறளை ஓதியுணர்ந்தோர், ஆளுக்கொரு நீதி, சாதிக்கொரு வழக் கெனச் சாற்றும் மனுநூலை மறந்தும் ஓதுதல் செய்யார் என்கி ன்றார். இன்னும் ஊனும் உயிரும் உருக்கும்—ஆணவம், கன்மம், மாயை எனும் மும் மலத்தையும் போக்கி, முழு மனத்தை ஆக்கிடும் திருவாசகத்தை ஓதியோர், பதம், சிரமம், ஜடை, கனம் என்ற பேதம் ஓது நெறிமுறையறியாது—பிறழ்ந்தும் உறழ்ந்தும் முன்னுக்குப் பின் முறைதவறி மொழியும் அவல நிலைக்கு ஆளாகார் என இன்தமிழ் ஏற்றமெலாம் போற்று மாறு இனிதே கூறியுள்ளார்.

இன்னணம் இவர் இயற்றிய பைந்தமிழ்ப் பாவாலே, நந்தமிழ்பால் இவருக்கு எத்துணைப் பற்றும் பெருமதிப்பும் புலமையும் இருந்தது என்பதுணர்த்தும். இப்படி இன் தமிழ்க் கன்னியை ஏத்திப் போற்றி, இறைமை யாக்கிப் புதிய தோர் சமயத்தை உருவாக்கி ஒளி நெறி காட்டிய ஒண் தமிழ்ச் சுந்தரனார் உயர்வினை எப்படி உணர்த்துவது என்பதுதான் அறியோம்.

வீரர்களின் பெயர்களை விரும்பும்போதுகூட, நல்ல தமிழ்ப் பெயர்களையே அமைத்துள்ளார். 'முருகன்'; 'சாத்தன்' எனப் பெயரிட்டுள்ளமை காணும்போது சாத்தனா ரின் செந்தமிழ் ஈடுபாடு ஏற்றமுற்று இலங்குவதறியலாம். வாய்ப்பு நேரும் போதெல்லாம் வண்டமிழ்த் திறம்பேசிச் செல்லும் பேராசிரியர் பெரும்பற்று உணரலாம். ஜீவக வழுதி படை வீரர்களை நோக்கி வீர உணர்வு ஊட்டும்போது கூட, ஒண்டமிழைச் சுட்டி வீறு எழச் செய்கின்றார்—செய்யச் செய்கின்றார் சுந்தரனார்.

> விந்தம் அடக்கினேன் தந்தநற் றமிழ்மொழி
> தற்சுதந் தரமறும் அற்பர்வாய்ப் படுமோ?

என வழுதி விளம்பிய காலை. 'தமிழ் மொழி வெல்க, வெல்க' எனப் படையோர் கூவினராம்.

> தொட்டில்தா லாட்ட, அவ் இட்டமாம் முன்னோர்
> தீரமுஞ் செய்கையும் வீரமும் பரிவும்
> எண்ணி யிருகணுங் கண்ணீர் நிறையக்
> கண் துயி லாதுநீர் கனிவுடன் கேட்ட
> வண்டமிழ் மொழியால் மறித்துஇக் காலம்
> 'ஆற்றிலம்; ஆண்மையும் உரிமையும் ஒருங்கே
> தோற்றனம்' எனச்சொலத் துணிபவர் யாவர்?

என முழக்கித் தமிழால் வீரம் விளைந்திடச் செய்கின்றான் ஜீவகன்—அல்ல செய்யுமாறு செய்கிறார் சுந்தரம் பிள்ளை.

# கொங்குநாட்டுச் செங்குன்றூர்

## (திருச்செங்கோடு)

**வித்துவான். சி. கோவிந்தராசனார்,**
பழம்பொருள் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்

### வெற்றித் தூண்

இக்கோயிலின் தோரண வாயிலுக்கு முன்னர் ஒரே கல்லில் செய்யப்பட்ட வெற்றித் தூணென்று வானளாவி நிற்கின்றது. கோயிலிலுள்ள கல்வெட்டுச் செய்திகளால் இவ்வெற்றித் தூணைப் பற்றிய வரலாறு கிடைக்கின்றது.

### கல்வெட்டுச் செய்தி

விசய நகர மன்னர் சதாசிவ தேவமகாராயர் ஆட்சியில் சகம்—1483 துன்முகி ஆண்டு சித்திரைத் திங்கள் இருபத்தைந்தாம் நாள் திங்கட்கிழமை, பூசம் கூடிய நன்னாளில் (கி. பி. 1561—ஏப்ரல் 21–ஆம் நாள்) தேவகிரியை ஆண்ட அனந்தபூபன் என்பவன் கொங்கு நாட்டை ஆண்ட நரசிம்மராமன்செயன் என்னும் மன்னனின் தோழமைக்கு அறிகுறியாக இவ்வெற்றித் தூணை நாட்டியுள்ளான். தூண் ஒரே

---

இன்னும் நாடகத்திற்கு இவர் எழுதியுள்ள முன்னுரை தமிழ் சிறந்திட சில பல வழிகளைச் செப்பிச் செல்வதும் அறியத் தக்கது.

இங்ஙனம் ஒல்லும் வகையெல்லாம் உயர் தமிழ்பால் பற்றும் பரிவும் கொண்டு பைந்தமிழ்த் திறமும் பெருமையும் செப்பி ; தமிழில் வரலாறு, இலக்கியம், ஆராய்ச்சி, தத்துவத் துறை போன்றவற்றில் தொண்டாற்றி, நாடகம் இல்லாக் குறையினை நிறைவு செய்து சிறந்திட்ட சுந்தரனார் பைந்தமிழ்ப் பற்றும் பணியும் பெரியது—அரியது. தமிழ்ப் பற்றும் பயிற்சியும் பெற்றிருந்தார் ; பணியாற்றற் கேற்ற துடிப்பும் துணிவும் கொண்டிருந்தார். ஆனால் அந்தோ நீண்ட ஆயுள் பெற்றிருந்தார் இல்லை. இன்றேல் எத்துணையோ வகையில் இனிய பணியாற்றித் தலையாய—நிலையாய—உலையாத உயரிய பணி பல புரிந்து இன்தமிழை ஏற்றமுறச் செய்திருப்பார். நாற்பத்திரண்டு வயதுக்குள்ளாகவே இறந்துபட்டார் ; இருந்திருந்தால், இனிய தமிழ் எய்தியிருக்கக்கூடிய ஏற்றமும் தோற்றமும் எண்ணிலடங்கா ! என் செய்வது ? இருந்தவரை, அவருக்கிருந்த பற்றும்—அவர் இயற்றிய பணியும் நினைந்து நாமும் அந்நெறி நின்று நற்றமிழ் வளர்ப்போமாக ! நலம் பெறுவோமாக !! நல்வாழ்வு வாழ்வோமாக !!!

கல்லில் நெடிதாக அமைக்கப்பட்டு, உச்சியில் கிளிக்கூண்டு போன்ற அமைப்பில் சிற்ப வேலைப்பாடுகளால் அழகு செய்யப் பட்டுள்ளது.

### நாச்சியார் கோயில் கல்வெட்டு

ஊரின் ஒரு பகுதியாகும் பெரிய பாவடியில் அமைக்கப் பட்டுள்ள அழகிய நாச்சியார் என்னும் திருப்பெயருள்ள காளியம்மையின் கோயில் மிகவும் பழமையானதாகும். வடக்கு நோக்கியுள்ள இக்கோயிலின் மேற்குப்புறச் சுவரில் பிற்காலத்திலெழுந்த கல்வெட்டொன்று உளது. கல்வெட்டி னைப் படியெடுத்துளேன்.

### கல்வெட்டு

(1) ௳ காலயுத்தி ஞு காத்திகை மீ ௲ ஷ வடகரை நாட்டில் அத்

(2) தி ஊரிலிருக்கும் நகரத்தாரில் வண்ணக்கார கொ

(3) த்திரத்தில் பாகம் பிரியா செட்டியார் குமாரன்

(4) குமாரவேல் செட்டியார் அழகியனுச்சியார் அம்

(5) மன் குளம் கட்டிவிச்சார் அவருடைய உபை

(6) யம் அடி அடி வாழையாயி அர்த்தனரி லிங்கர்

(7) ரக்ஷிக்கவும் ௳.

இக்கல் வெட்டுச் செய்தியால் அத்தியூர் என்னும் நகரத் திலிருக்கும் வண்ணக்கார வழியினரில் தோன்றிய குமாரவேல் செட்டியார் அழகிய நாச்சியார் என்னும் இவ்வம்மைக்குரிய தாக குளமொன்று வெட்டிய அறச் செயல் புலனுகின்றது. இக்குளம் கோயிலுக்கு முன்னர் அமைந்துளது.

### வீரச் சிலையும்—நடுகல்லும்

திருச்செங்கோட்டின் ஒவ்வொரு பகுதியையும் யான் பழமையைக் காணும் நோக்குடன் ஆராய்ந்து வரும்போது ஊரின் வடகிழக்கு மூலையிலுள்ள மகுதிச்சந்து என்னும் பெயருடைய சிறிய சந்தில் குதிரைக்கல் என்று மக்கள் குறிப்பிடும் ஒரு கல் நிற்பதைக் கண்டேன். நான்கடி யளவில் வெளியே நீண்டு நிற்கும் இக்கல்லில் புடைப்புச் சிற்பமாக குதிரைமேல் ஒரு வீரன் அமர்ந்துள்ளதைப் போன்று செதுக் கப்பட்டிருந்தது. கொண்டை முடியுள்ள வீரனுக்கு மேல் குடை யொன்றும் கல்லெழுத்துக்களும் வெட்டப் பட்டிருந்

தன. சிதைவுகள் மிகுதியாக இருப்பினும் கல்லைப்பற்றிய செய்தி புலனாகும் அளவிற்குச் சொற்கள் கிடைத்தன.

"ஸ்வஸ்தி ஸ்ரீ சுந்தரபாண்டியதேவற்கு யாண்டு ௬-வது ...வடகரை நாட்டு......கன்னையன்...ரொடு......ங்கியதா...... ட்ட...ா........."

சுந்தரபாண்டியனுடைய ஆறாவது ஆட்சியாண்டில் ஏற்பட்ட போரில் வடகரை நாட்டதிகாரமுடைய கன்னைய தேவனென்பான் குதிரைமீது துஞ்சிய செய்தி புலனாயிற்று. இப்பகுதியில் மற்றொரு வீரக்கல் புதையுண்டு கிடக்கின்றது.

ஊரின் வடக்கே ஒதுக்கமாகவுள்ள பகுதியில் ஒரு சிற்பக் கல் கழிவு நீர்க் காலில் கிடக்கக் கண்டேன். தூய்மை செய்து பார்த்தபோது அஃதொரு நடுகல்லென்பது அதிலுள்ள கல்வெட்டாலும், சிற்பச் சுவடுகளாலும் தெரிந்தது. ஸ்ரீ சுந்தர பாண்டியத் தேவர்க்கு யாண்டு 12-ஆவது என்று தொடங்கும் இக்கல்வெட்டுச் செய்தியால் அரசனொருவன் விண்ணுலக டைந்த செய்தி கிடைப்பதாயிற்று. கல்லின் நடுவே பெருமிதமுள்ள அரசவுருவ மொன்று வீரப் பொலிவுடன் விளங்க இருபுறமும் பணியாளர் கொற்றக் குடை பிடித்துள்ளனர். மேலே தேவர்கள் வரவேற்கின்றனர். பாதத்தின் கீழே வரிசையாக குதிரை, யானை. முரசு ஆகிய அரச சின்னங்கள் உள்ளன. இக்கல் பனிரெண்டாம் நூற்றாண்டில் எழுந்த நடுகல்லாகும்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புடைய கற்களைப் பழம் பொருள் பாதுகாப்புக் கழகத்தார் நன்னிலைப் படுத்த வேண்டும்.

இப்பொழுது திருச்செங்கோடு என்று கூறப்பெறும் ஊர், மலையும் கோயிலும் கொண்டு விளங்குவதோடு வரலாற்றுச் சிறப்புடைய சின்னங்கள் பலவற்றையும் கொண்டுவது. முயன்று இப்பகுதியை ஆராய்ச்சி செய்யின், வரலாற்றுண்மைகள் பல கிடைக்கலாகும்

7-12-62-ல் யான் சென்று ஆராய்ச்சி செய்தபோது, திருச்செங்கோடு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுள் பலர் நன்முறையில் உதவி செய்தார்கள். அவர்களுடைய அன்பிற்கு என்றும் நன்றியுடையேன்.

சென்ற இதழின் தொடர்ச்சி:

# களவியல் உரை நலம்

## (முதல் நூற்பா உரை)

(திருவாட்டி. மேனகை அம்மையார், இராணிப்பேட்டை)

இஃதொன்றினலேயே தமிழர் பொருள் நெறி பிறழ்ந்த காலத்தே அவர்களை வஞ்சித்துக் கொண்டு சென்று அந்நெறிக்கண் நிறுவுவானெழுந்த பேரருட் பெருக்கால் இந்நூலெழுந்த தென்பது வலியுறும்.

இவ்வாறு இல்லது என்று கொள்ளாது உலகிய லென்று கொண்டே ஆசிரியர் தொல்காப்பியனர்,

> "காமம் சான்ற கடைக்கோட் காலை
> ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
> அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
> சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே."

என்று அந்நெறியின் மிக்கதோர் ஒழுக்கங் காட்டிச் செல்வர்.

7. கற்றதனு லாய பயன்

இனி, அடுத்துவரும் "இதுகற்க நாற்பொருளும் பயக்கும்" என்பதன் விரிவுரையைக் காண்பாம்:

"இனிப் புகழ், பொருள்; நட்பு. அறனென்னும் நான் கினையும் பயக்கும் இதுவல்லனுக, என்னை? கற்று வல்லன் என்பதனின் மிக்க புகழில்லை. உலகத்தாரானும் சமயத்தா ரானும் ஒருங்கு புகழப் படுமாகலான் என்பது. இனிப்பொரு ளும் பயக்கும் என்னை? பொருளுடையாரும் பொருள் கொடுத்துக் கற்பராகலின் என்பது. இனி நட்பும் பயக்கும் என்னை? கற்ருரைச் சார்ந்தொழுகவே எமக்கும் அறிவு பெருகும் என்று பலருஞ் சார்ந்தொழுகலின் என்பது. இனி அறனும் பயக்கும் என்னை? ஞானத்தின் மிக்க கொடை இன்மையான் என்பது."

என இவ்வாசிரியர் கல்வியின் பயன் கூறும் செவ்வி வியக்கற் பாலது இவ்வுரை பன்முறை உரைத்தும் உணர்ந்தும் நாவும் சித்தையும் இறும்பூதுறச் செயவல்லது.

இந்நூல் தோற்றக் காலம் கடைச்சங்கத்தார் காலம் எனவும் களம் உக்கிரப் பெருவழுதியின் அவைக்களம் எனவும் காரணம் பொருளிலக்கணம் பெருதிடர்ப் படுவாரைக் கண்டாலவாயிற் பெருமானடிகளால் அருளப்பட்ட தென்றுங் கூறுவர். இதுபற்றிய ஆய்வு முன்னமே நிகழ்த்தினும். இதனையடுத்து நூல்களி னிலக்கணம் நடக்கும். இதில்

மூவகை நூற்கும் எதிர் நூற்கும் விளக்கம் தந்து நூல் என்ற சொற்குப் பொருள் விரிப்பர். இனி நூல் நுதலியது என்ப தற்குத் தமிழ் நுதலிற்றென்பர். ஏனைய உரையாசிரியன் மார் நூல் நுதலியது என்பதற்கு அரும்பொருளைந்து, எழுத்து சொல், பொருள் என நூலுக்கியைபுடைய பொருளை யெடுத் தோதினராக இவர் தமிழ் நுதலிற்று என்றல் இயைபுடைத் தோ என அறிஞர்கள் எண்ணுக. அன்றியும் திருக்கோவை யார் நுதலியது உரைக்குமிடத்துப் பேராசிரியர் கூறும் விளக்கமுங் கருதுக என்பது.

## 8. நூற்பா நுதலியது

இனி, "அன்பினைந்திணை" என்ற முதல் நூற்பாவுக் குரை காணப்புக்க ஆசிரியர் கண்ணழித்துப் பொழிப்புத்திரட்டி அகல உரையுங்காண்பர் "அன்பினுடைய ஐந்திணையிற் களவு எனப்பட்ட ஒழுக்கம் பார்ப்பார் வேதத்துக்கண் மகட் கோடலா றென்னு மெட்டினுங் கந்தருவர் ஒழுகலாறெப்பது. அதனைக்களவு என்று சொல்லுவர் கற்றுவல்லோர் என்பது பொழிப்புத் திரட்டலாகும்.

## 9. அன்பு என்பது ?

அன்புடையரான குணம் யாவையோ எனிற் சாவிற் சாதல் நோவினோதல், ஒண்பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், புணர்வு நனிவேட்டல், பிரிவு நனியிரங்கல் என இவை. இவை திரிபின்றி நிகழ்ந்தவழி அன்புண்டெனக் கொள்க என அத்திரிபுகளின் விரிவு கூறுவர். அன்பு எனப் பட்டதுதான் வேண்டப்பட்ட பொருளின்கண் தோன்றும் உள்ள நிகழ்ச்சி என்றும் ஆசிரியர் விளக்குந்திறம் உணர்ந்து மகிழற்பாலது.

## 10. திணை என்பது

அடுத்து, முதல், கரு, உரிப்பொருள்களை ஐந்திணை என்ற சொற்கு அகல உரையாக விரிப்பர். ஆசிரியர் பெருமான் திணை என்பதை விளக்குந்திறன் கற்பார் மயலறுக்கு மாண்பினது.

"இனி, ஒழுக்கத்தினைத் திணை என்பாரும், நிலத்தினைத் திணை என்பாரும் என இருபகுதிய ராசிரியர். அது பொருந் தாது. ஒழுக்கமே திணை எனப்படும் குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது. என்னை? விளக் காகிய சுடரிருந்த இடனும் விளக்கு எனப்பட்டது போல என்பது."

"இனி ஒரு சாரார் ஒழுக்கத்தினையும் திணை என்ப. நிலத் தினையும் திணை என்ப. ஆகலானன்றே "அன்பினைந்திணை" என்றது 'ஐந்திணையாடை ஐந்திணை மஞ்சிகை' என்றதுபோல

என்ப. அது பொருந்தாது. அஃதே கருதியது எனின்' முன்னர்த் 'திணையே கைகோள்' என்ஞனன்றே. 'இணையே கைகோள்' என்னுமன்றே, இணை என்று கருதிஞையின் என்பது,''

எனவுரைக்குந் திறம் போற்றற்பாலது. நிலத்தைத் திணை என்ருர் அவ்வொழுக்க நிகழ்ச்சி ஆண்டு சிறப்புறு தலின். மற்றும் அகத்திணை ஏழும் புறத்திணை ஏழுமாக எண்ணப்பட நிலமோ, முல்லை குறிஞ்சி, மருதம், நெய்தலென நான்காக எண்ணப்படலையுங் கருதின் ஒழுக்கமே திணை என்னும் உண்மை புலஞம்,

## 11. களவுச் சிறப்பு

"அன்பி ஊைந்திணைக் களவு என அமையாதோ? எனப் படுவது என்றது எற்றிற்கோ எனின் செய்யுளின்பத்தின் பொருட்டு வந்தது என்னும் ஒருவன். அற்றன்று அதஞன் ஒருபொருளுரைப்பல் என்னும் ஒருவன். அதஞன் ஒரு பொருளுரைப்பான் பக்கம் வலியுடைத்து. அஃது யாதோ எனின் களவு என்றற்குச் சிறப்புடைத்து என்றவாறு. 'ஊரெனப்படுவது உறையூர்' என்ற விடத்துப் பிறவும் ஊருண்மை சொல்லி அவற்று ளெல்லாம் உறையூர் சிறப் புடைமை சொல்லுப. இங்குப் பிறவும் களவுண்மை சொல்லி அக்களவுகட்கெல்லாம் இக்களவு சிறப்புடைத்து சுவர்க்கம் வீடுபேறுகளை முடிக்குமாகலான். எனப்படுவது என்று சொல்லிச் சிறப்பிக்கப்பட்டது. அது பாயிரத்துள்ளும் உரைத்தாம் மற்றும் உலகத்துக் களவாயின எல்லாம் கை குறைப்பவும் கண் சூலவும் கழுவேற்றவும் பட்டுப் பழியும் பாவமும் ஆக்கி, நரகத் தொடக்கத்துத் தீக்கதிகளின் உய்க் கும்' இது மேன்மக்களாற் புகழப்பட்டு ஞான வொழுக்கத் தோ டொத்த இயல்பிற்ரு கலானும் பழிபாவம் இன்மை யானும் எனப்படுவது என்று விசேடிக்கப்பட்டது,"

என விளக்கியஞரும் நயம் காண்க: இவ்வகப் பொருள் ஒழுக்கம் ஞான வொழுக்கத்தோ டொத்த இயல்பிற்ருதற்கும் நல்லோரால் புகழப்படுதற்கும் தேவாரப் பதிகங்களும் திருக் கோவையாரும் சான்ருதல் காண்க. இக் கோவை நூற்கள் பிற்காலத்தே மானுடவர்க்கு வாழ்க்கைப்பட்டு உட்கிடை உணரப்படாது காம நூற்களாய்க் கதியிழந்தன. இதஞை னன்றே அகத்துறைப் பாக்கள் சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெரு எனத் தொல்காப்பியர் வரம்பிட்டனர். ஏனைய எல்லா நெறிகளிலும் தம் அறிவிழந்த தமிழர் அகநெறிக்கண்ணும் வரம்பிகந்து நெறி பிறழ்ந்தனர். இதஞல் இத்தகு நூற்குள தாம் விழுப்பமும் வழுக்கியது, என்னே! தமிழின் நிலை!!

ஆயின், 'அது பாயிரத்துள்ளும் உரைத்தாம்' என்றதனால் பாயிர ஆசிரியரும் உரையாசிரியரும் ஒருவரே எனக்கொள்ளாமோ வேறெனக் கொண்டதென்னை யெனின் நன்றே கடாயினாய். அவ்வாறு கொள்ளாம் கொள்ளின், களவியல் வரலாற்றுப் பகுதியில் நிகழ்த்திய குற்றமெல்லாம் வந்து தங்கும். உரை நடந்துவந்த முறையை நோக்கின் இவ்வுரை பலர் கைப்பட்டுவந்த தெனல் விளங்கும் எனவே பிற்காலத்துப் பாயிரம் கண்டு ஏடெழுதுவார் செய்த குறிப்பு இஃது எனக் கொள்வதே அமையும் என்க.

## 12. கந்தருவ வழக்கம்

அந்தணர் அருமறை மன்றல் எட்டு என அவற்றின் வகைகளையும் தன்மைகளையும் விளக்கி அவற்றுள் களவு யாழோர் கூட்டம் ஒப்பது என்பதை ஆசிரியர் பின்வருமாறு விளக்குவர்.

"இனிக் கந்தருவ வழக்கம் என்பது—கந்தருவ ரென்பாரீண்டுச் செய்த நல்வினைப் பயத்தால் ஒருவர் கொடுப்பாரும் அடுப்பாருமின்றி இருவரும் ஒரு பொழிலகத் தெதிர்ப்பட்டுப் புணர்வது. இது காந்தர்ப்ப மணம். இதனை யொப்பதனைக் களவு என்று வேண்டும் இவ்வாசிரியன்.

"அஃதேயெனின் கந்தருவ வழக்கம்போல்வதென்னாது கந்தருவ வழக்கம் என்றமையானதனைக் களவென்று கொள்ளாமோ எனிற் கொள்ளாம். நூற்கிடக்கை அவ்வியல் பிற்றன்றாகலான் போல்வதென்றே கொள்ளற்பாலது. போறல் என்பது சிறிதொத்துச் சிறிதொவ்வாதொழிவது. என்னை? குவளைப்பூப் போலுங்கண் என்றால் நீலமாத்திரை ஒக்கும். மற்று ஒவ்வாப்புடை பெரிது. பவளம் போலும் வாய் என்றால் செம்மை மாத்திரை ஒக்கும்; மற்று ஒவ்வாப்புடை பெரிது. இங்கும் ஏகதேசத்துப் புணர்தலும் கொடுப்பாரும் அடுப்பாருமின்றிப் புணர்தலும் ஒத்த குலத்தினராதலும் ஒத்த அன்பினராதலும் என்னும் இத்துணையே ஒப்பிக்கப்பட்டது. மற்றப் புடையெல்லாம் ஒவ்வாது.

"அஃதேயெனில் கந்தருவ வழக்கம் போல்வதென வேண்டாவோ சூத்திரத்துள் எனில் வேண்டா. உவமம் தொகுத்தவாறு சொல்லுதும். பசுப்போல்வாளைப் பசு என்றலும் பாவைபோல்வாளைப் பாவை யென்றலும் என்பது.

"அஃதேயெனில் அவை எட்டும் அதனை ஒத்த இதுவுமென, மணம் ஒன்பதாகற் பாலஎனின், அதுவன்று. அவ்வெட்டும் உலகியலிலுள்ளன. இஃது அன்னதன்று இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கமாகலின் உலக வழக்கத்தினோடு இயையான் என்பது".

இதனுள் கந்தருவ வழக்கம் போல்வது என்றதற்குத் தந்த விளக்கம் பெருமையுடைத்து. தனிமையிற் கண்டு புணர்தலும் ஒத்த குலத்தினராதலும் ஒத்த அன்பினராதலும் இதனுள் ஒப்பிக்கப்பட்டது. மற்று ஒவ்வாப்புடைதான் யாதோ எனின், ஒத்த பண்பு, ஒத்த நலன், ஒத்த செல்வம், ஒத்த கல்வி, ஒத்த பருவம் ஆயவை என்க. அன்றியும் இத்தலைமக்கள் தம் ஒழுகலாற்றின்கண் படும் தலைமையும் ஒவ்வாப்புடையாம். அன்றியும் களவொழுக்க வரலாற்றின் கண் வரும் இயற்கைப் புணர்ச்சி யொன்றே ஒப்பிக்கப் பட்டது. பின்னர் நிகழும் இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கிமதியுடம்பாடு, மடற்றிறம், பாங்கியிற்கூட்டம், ஒரு வழித்தணத்தல், வரை பொருட்பிரிவு, அறத்தொடு நிற்றல், உடன்போக்கு வரைவு முதலாயின ஒவ்வாப்புடையின என்றறிக.

அந்தணர் அருமறை மன்றல் எட்டு. அதனொடு இதனை யுங் கூட்டி மணம் ஒன்பதாகற்பால என்றதற்கு ஆசிரியர் தரும் விளக்கம் இசைவுடைத்தன்று. அம்மணம் எட்டும் பார்ப்பார்க்கே உரித்தென்பது 'அந்தணரருமறை மன்றல்' என்ற தொடரும் அம்மன்றலை விளக்கும் ஆசிரியர் உரையும் தெளிக்கும் என்க. என்வே தமிழர் தம்முள் நிகழும் இவ் வொழுக்கம் அவற்றோடுவைத்து ஒருங்கெண்ணற்பாலதன்று. என்னை? அருமறை, மணம் எட்டென விதித்ததாகத் தமிழர் இலக்கணநூல் மணம் ஒன்றென விதித்துப்போந்தது. அவ்வொன்றும் யாழோர் கூட்டத்தனையதேயன்றி யாழோர் கூட்டமேயன்று. ஆகலின் அவற்றொடு கூட்டி அவற்றுள் ஒன்றென இதனை எண்ணுதல் ஒண்ணாது. என்னை? பன்றி பத்துக்குட்டிகளையீன்றது. பருமருப்பின பகடு ஒருகுட்டி யீன்றது ஆகக்குட்டிகள் பதினொன்றாகற்பால என்னாரன்றே! அன்றிக், குட்டிகளை எண்ணுவதே கருத்தாயின் ஏனை விலங்கு களையும் உடன்வைத்தெண்ணல் வேண்டுமே! அஃதேபோல அந்தணர் அருமறை மன்றல் எட்டும் தமிழர் மணம் ஒன்றும் கூடி ஒன்பதாகற்பால எனின், பின்னர் சீனர் மணம், யவனர் மணம், ஆங்கிலர் மணம், அமெரிக்கர் மணம் என விரிந்து மணங்களின் தொகைவளர்ந்து கொண்டேபோம். ஆகலின் உடன்வைத்தெண்ணற் பாலதன்றென்க.

(தொடரும்)

# வள்ளுவரும் கண்ணோட்டமும்

S. ராஜு செட்டியார் B.A.,B.L.,

## முகவுரை

அழகரும் குடவரும் கண்ணோட்டத்திற்குத் தரும் பொருளும் விளக்கமும் வள்ளுவர் கருத்திற்கு அரண்செய்யாது போகின்றன என்று என் அறிவிற்குப்பட்டது. ஆகவே கண்ணோட்டத்தின் உண்மைப் பொருள் எது என்று அறிய விரும்பினேன். அவ்விருப்பத்தால் இவ்விருவரது கூற்றுக்களை யும் கண்ணோட்டம் என்ற அதிகாரத்தில் வரும் குறள்களையும் நன்ருகத் துருவி ஆராயத் தலைப்பட்டேன். அதனால் பல உண்மைகள்---புதிய உண்மைகள்—எனக்குப் புலனாயின. எவ்வளவு தவருன கருத்துக்களை இவ்விரு ஆசிரியர்களும் வெளியிட்டிருக்கின்றனர் என்பதையும் அக்கருத்துக்கள் நாளது வரையில் சரியான கருத்துக்களாக ஏற்கப்பட்டு வந்திருக்கின்றன என்பதையும் இக்கட்டுரையால் அறியலாம். நான் கூறும் கருத்துக்கள் புதியனஎனினும், அக்கருத்துக்கள் உருவாவதற்கு வேண்டிய காரணங்களையும் தந்திருப்பதால், அறிஞர்கள் அவற்றை நன்கு ஆராய்ந்து, கண்ணோட்டத்தின் உண்மைப் பொருள் குறித்து நல்லொளி தந்து உதவுவர் என்பது திண்ணம். தமிழொடு சட்டமும்பயின்ற அறிஞர் களுக்கு எனது வாதமும் விளக்கமும் எளிதில் புலனுகும் நான் சட்டம் பயின்றறிந்திருந்த காரணத்தால் வள்ளுவர் குறிப்பிடும் சில சட்டஉண்மைகளை நீதிமுறை உண்மைகளை— நான் நன்கு உணரமுடிந்தது எனக் கூறவேண்டும்.

## கண்ணோட்டமும் அழகரும் குடவரும்.

இது குறித்து அழகரும் குடவரும் தரும் பொருளையும் விளக்கத்தையும் ஆராய்தல் வேண்டும். அழகர், "தன்னொடு பயின்ருரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை," என்று அதற்குப் பொருள்கூறி, "இஃது அவர்மேல் கண் சென்றவழி நிகழ்வது ஆகலின், அப்பெயர்த்தாயிற்று; மேல் வெருவந்த செய்யாமையுள் கூறிய அதனையே சிறப்புப் பற்றி விரித்துக் கூறுகின்றமையின், இஃது அதன்பின் வைக்கப் பட்டது "என விளக்கம் தருகிருர்.

"கண்ணோட்டமாவது கண்ணுற் காணப்பட்டாரை அருள் செய்தல்" என்று குடவர் பொருள் உரைத்து, "குற்றம் செய் தாரை ஒறுக்குங்கால் உலகத்தார் இசைய ஒறுக்கவேண்டும் ஒன்ருராயினும், அவ்வாறு செய்தவரைத்தன் முன்னுகக் கண்டால், அதனைப் பொறுத்தலும் வேண்டும் என்று அதன் பின் இது கூறப்பட்டது. இது பெரும்பான்மையும் முன்பு கண்டு பழகினர் மேற்று," என்று விளக்கம் தருகிருர்.

கருமம்சிதையாமல் கண்ணோட வேண்டும் என வள்ளுவர் தரும்குறிப்பினை இவர்கள் நன்குஉணர்ந்து இருப்பின், இவர்கள் இத்தகைய பொருளும் விளக்கமும் தந்திருக்க மாட்டார்கள்.

## செங்கோல் முறையில் ஒரு கூறு.

கண்ணோட்டம் என்பதன் உண்மைப் பொருளை அறிவதற்கு, அது வரும் இடத்தை நன்கு அறிதல் வேண்டும். அரசனுக்குச் செங்கோல் முறை எது என்பதை விளக்கித் தரவே செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை, கண்ணோட்டம் என்ற நான்கு அதிகாரங்களை வள்ளுவர் வகுத்துள்ளார். கண்ணோட்டம் வரும் இடத்தை அழகரும் குடவரும் தம் விளக்கங்களில் சுட்டிக் காட்டுகின்றனர். என்றாலும் மேலே குறிப்பிட்ட நான்கு அதிகாரங்களும் செங்கோன் முறையினை விளக்க எழுந்தவை என்பதை அவ்விளக்கங்கள் உணர்த்தவில்லை.

## தண்டனையில் ஓர் அறம்.

குற்றஞ்செய்தாரை ஒறுக்குங்கால் அரசன் கைக்கொள்ள வேண்டிய அறமே கண்ணோட்டம். குற்றம் செய்தார் பழகியவர், பகைவர், நொதுமல் என்ற எத்திறத்தார் ஆயினும், அரசன் செங்கோல் செலுத்தி, கையிகந்த தண்டம் நேராதபடியும், வெவவந்த செயலாக நேராதபடியும் முறைசெய்ய வேண்டும். தன்னொடு பயின்றார்—முன்புகண்டு பழகினர் என்பாரிடத்து மட்டும்தான் கண்ணோட்டம் செலுத்த வேண்டும் என அழகரும் குடவரும் தரும் விளக்கமானது வள்ளுவர் வகுத்துத்தரும் நடுவு நிலைமைக்கும், செங்கோன்மைக்கும் அரண் செய்யாதும், வள்ளுவர் கடிய வேண்டும் எனக் குறிப்பிடுகிற கொடுங்கோன்மை வெருவந்த செய்தல் என்ற குற்றங்களை வளர்த்தும் செல்வதாகின்றது. மேலும் கண்ணாற் காணப்படாதவர்க்கும்—அதாவது கண்டுபிடிக்க முடியாத குற்றவாளிகளுக்கும்—கண்ணோட்டம் செலுத்த வேண்டியது அரசன்கடன்.

## இரண்டு பொருள்.

கண்ணோட்டம் என்பதை வள்ளுவர் இரண்டு பொருள்களில் சுட்டி இருக்கிறார். அன்பினால் அன்பினர்மேல் கண் ஓடுதல் என்பது ஒருபொருள். இத்தகைய கண்ணோட்டத்தை நீதி செலுத்தும் அரசன் புறக்கணிக்க வேண்டும் எனச் செங்கோன்மை என்ற அதிகாரத்தில் மற்றொரு பொருளாக வள்ளுவர் கூறுகிறார். இதனை,

> "ஓர்ந்துகண் ஓடாது இறைபுரிந்து யார்மாட்டும்
> தேர்ந்துசெய் வஃதே முறை"

என்ற குறளால் அறியலாம். இக்குறளிலே யார்மாட்டும் கண்ணோடாது இறைபுரிந்து தேர்ந்து ஓர்ந்து செய்வதுதான் முறை என வள்ளுவர் மிகமிகத் தெளிவாகக் குறிப்பிட்டு இருப்பதைக் கருத்திலே கொள்ளாது, பழகியவர் கூறியவற்றை அரசன் மறுத்தல் ஆகாது என அழகர் கூறுவதும், குற்றம் புரிந்தவன் தன்முன் வந்தால் அவனை மன்னித்து விடுதல் வேண்டும் எனக் குடவர் கூறுவதும் பெருங் குற்றங்களாகும்.

அறிவிற்கும் அறத்திற்கும் பொருந்தாதன நிகழுமிடத்தில் கண்ணோடி, அப்பொருந்தாதனவற்றால் நலிவோர்மேல் பரிவு கொள்ளுதலும் அப்பொருந்தாதனவற்றை நீக்கி அருளுதலும் என்பது இரண்டாவது பொருளாம். சட்ட திட்டங்களிலும், நீதி செலுத்துவதிலும், அரசு புரிவதிலும், உரிமைகொண்டாடுவதிலும் உள்ள அறிவின்மையை அறமின்மையை அருளின்மையைப் போக்கி அருள்வதே கண்ணோட்டம். இப்பொருளில்தான் வள்ளுவர் கண்ணோட்டம் என்பதைக் கண்ணோட்டம் என்ற அதிகாரத்தில் பயின்று வரச்செய்து இருக்கிறார் என ஊகித்து அறியலாம்.

## தாட்சணியமும் அல்ல. மன்னித்தலும் அல்ல.

வடமொழியினர் கூறும் தாட்சணியம் என்ற சொல்லை மனத்தில் கொண்டு, அழகர் கண்ணோட்டத்திற்குப் பொருள் காண்பதால், அவர் தவறுகிறார். மன்னித்தல் என்ற பொருளில் கண்ணோட்டத்திற்கு விளக்கம் செய்வதால் குடவர் தவறுகிறார், கண்ணோட்டம் என்பது தாட்சணியமும் அன்று. மன்னித்தலும் அன்று.

## பழகினரும் பயின்றாரும்

கண்ணோட்டம் என்ற அதிகாரத்தில் வரும் பத்துக் குறள்களில் ஒன்றிலேனும் தன்னோடு பயின்றாரையும் முன்புகண்டு பழகினரையும் குறிக்கும் குறிப்பொன்றும் இல்லாதிருக்க, இவர்களை வலிய நுழைத்துக் கண்ணோட்டத்திற்குப் பொருள் கண்டு, அழகரும் குடவரும் இடறுற்றுப் போனார்கள். இவ்விருவரும் கண்ணோட்டம் வரும் இடங்களில் எல்லாம் தாட்சணியம் என்றோ மன்னித்தல் என்றோ பொருள் தராமல் கண்ணோட்டம் என்றே பொருள் தந்து செல்வது போற்றத் தக்கது. அதிகாரத்தின் முதலில் அவர்கள் தரும் முன்னுரை இல்லாது இருந்தால், அவர்கள் எக்குற்றத்திற்கும் ஆளாகி இருக்கமாட்டார்கள்.

மேலும் ஆட்சி குறித்தும் நீதிபரிபாலனம் குறித்தும் அரசனுக்கு அறவுரை கூற அமைச்சரும் பெரியாரும் இருக்க, அவர்களினும் வேறானவர்கள்—அதாவது தன்னோடு பயின்றார்

முன்புகண்டு பழகினர் என்போரான நன்பர்களும் உற்ருர் களும்—'அதைச்செய் இதைச்செய், அதைச் செய்யாதே இதைச் செய்யாதே' என அரசனுக்கு ஆணேயோ வேண்டு கோளோ விடுவர் எனவும், அதனை அரசன் மறுத்தல் ஆகாது எனவும், அழகர் கூறுவது சிறிதும் பொருந்தவில்லை. இவ்விருவர் கருத்துப்படி தன்ஞெடு பயின்ருர் முன்புகண்டு பழகினர் என்பவர்கள் நண்பரும் உற்ருரும் அல்லர் அமைச் சரும் பெரியாரும் தான் எனக் கொள்வதற்கு இடமே இல்லை. முன்புகண்டு பழகினர் என்பவர் குற்றவாளியே என்ற பொருளில் குடவர் விளக்கம் தருவதால், அமைச்சரும் பெரி யாரும் விலக்கப்படுதல் காண்க. தன்ஞெடு பயின்ருர் நண்பரே என்ற பொருளில் அழகர் அதனைப் பயின்று இருக் கிருர் என்பதை அவர்

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்" (355)

என்ற நற்றிணை வரிகளை 'பெயக்கண்டு நஞ்சுண்டு அமைவர்' என்ற குறளுக்குத்தான் காணும் உரைக்கு மேற்கோளாகக் காட்டுவதால் அறியலாம்.

### நீதியும் தண்டமும் யாவர்க்கும் பொது

அரசனுடைய நீதிமுறையில் விளங்க வேண்டிய அறமாக தண்டம் வழங்கும் போதுஅரசன் கையாள வேண்டிய அளவை யாக— வள்ளுவர் கண்ணேட்டத்தைப் பயின்று இருக்கிருர், இவ்வாறு சிறப்புப் பொருள் காணது தாட்சணியம்தான் கண்ணேட்டம் என்ருல், தன்ஞெடு பயின்ருர் கூறியவை மறுக்கமாட்டாமைதான் கண்ணேட்டம் என்ருல், பழகியவர் களையும் அவர்களுக்கு வேண்டியவர்களையும் தக்காங்கு நாடவும் கூடாது, அவர்களது குற்றங்கள் எத்துணைய கொடி யனவாயினும் அவர்கள் மேல் வழக்குத் தொடர்தலும் கூடாது என்ற முடிவிற்குவந்து இடருற வேண்டும். முன்புகண்டு பழகினர் குற்றம் செய்துவிட்டு அரசன் முன்சென்ருல், அவர் செய்த குற்றத்தை அரசன் பொறுத்தலும் வேண்டும் என்று வெளிப்படையாகவே குடவர் கூறுகிருர். இவ்விதமான பொறையும் மேலே குறிப்பிட்ட மறுக்கமாட்டாமையும் கண் ணேட்டம் ஆகா, செங்கோண்மை ஆகா. இத்தகைய பொறையும் மறுக்கமாட்டாமையும் பொதுமக்கள் நன் மைக்குப் பாடுபட வேண்டிய அமைச்சரும் அரசரும் தமக்கு வேண்டிய நண்பினர் உறவினர்—அந்நண்பினர் உறவினர் களுக்கு வேண்டிய நண்பினர் உறவினர்—என்போர்களுக்கு உதவிபுரிதல் (nepotism, jauouritism) என்ற குற்றங்களாக ஆகின்றன. இக் குற்றங்களையா வள்ளுவர் ஆதரிப்பார்?

## கண்ணோட்டம் எப்போது

ஒருவன் குற்றம் செய்கிறான். அக் குற்றத்தைத் தக்காங்கு நாடி, நீதி செலுத்த வேண்டியது அரசனது கடன். குற்றம் சாட்டப்பட்டவன் குற்றம் செய்தது உண்மைதான் என்று விசரித்து உணர்ந்த பிறகு, அக்குற்றத்திற்கு எவ்வளவு தண்டனை வழங்க வேண்டும் என ஆராயும் போது, அரசனுக்குத் துணையாக நிற்க வேண்டியது கண்ணோட்டம். குற்றம் சாட்டப்பட்டவன் மீது கொணரப்பட்ட வழக்கு விசாரணையில் இருக்கும் வரையில்—அதாவது அவன் அக் குற்றத்தைச் செய்தவன்தான் என்ற முடிவுக்கு அரசன் வருகிறவரையில்—கண்ணோட்டத்திற்கு இடம் இல்லை தாட்சணியத்திற்கும் இடம் இல்லை என்பதை

> ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
> தேர்ந்து செய்வஃதே முறை

என்ற குறளால் தெளிவுபடுத்துகிறார் வள்ளுவர்.

குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்றவாளிதான் என்ற முடிபிற்கு அரசன் வந்த பிறகு, குற்றவாளியின் வயது அறிவு அறம் பண்பாடு குற்றத்திற்குக் காரணம் அதன் விளைவு என்ற இவற்றிற்குத் தக்கபடி தண்டனை அமைய வேண்டும். அவ்வாறு அமைக்கும் அறத்திற்குத்தான் கண்ணோட்டம் என்று பெயர்.

## தண்டனையின் அளவு

பண்பாடுடைய மக்களுக்கு நாணமும் மானமும் தீவினையச்சமும் இயல்பாக இருக்கும். அவர்களுக்குத் தண்டனை குறைவாக இருந்தாலும், அவர்கள் மீண்டும் குற்றம் புரிய மாட்டார்கள். பண்பாடில்லா மக்கள் மீண்டும் குற்றம் செய்யாது இருக்கத் தண்டனையானது கடினமாய் இருக்க வேண்டும். தலைச்செல்லா வண்ணத்தால் ஒறுக்கவேண்டும் என்று வள்ளுவர் சொல்லவில்லை. அவ்வாறு சொல்லி இருந்தால், குற்றவாளிகளுடைய பண்பாடு முதலியவற்றைக் கருதாமல் எல்லோர்க்கும் ஒரே விதமான தண்டனை வழங்கலாம் என ஏற்படும். ஆனால் வள்ளுவர் "தலைச் செல்லா வண்ணத்தால் ஒத்தாங்கு ஒறுக்கவேண்டும்" என்பது, குற்றவாளியினுடைய பண்பாடு முதலியவற்றிற்குத் தக்கபடி தண்டனை அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ஒத்தாங்கு என்பதற்கு ஒரே தன்மையான—ஒரே அளவினதான—என்பதல்ல பொருள். குற்றவாளிகளது பண்பாடு முதலியவற்றினைக் கருதாமல், எல்லோர்கும் ஒத்த தண்டனை ஒரே அளவினதான தண்டனை—வழங்கினால், அது அறிவில்லா அறமில்லா நடுவுநிலைமையாகுமே ஒழிய, கண்ணோட்டம் ஆகாது.

**விசாரணையின்போது**

பகைவர், நண்பர், நொதுமல் என்பதைக் கருதாமல் விசாரணையில் ஈடுபட்டு, நடுவுநிலைமையைக் காக்க வேண்டும். அதனால் "ஓர்ந்து கண்ணோடாது" என்ற குறளை வள்ளுவர் வகுத்திருக்கிறார். குற்றவாளி என்ற முடிவிற்கு வரும் வரையில் நடுவுநிலைமை வேண்டும். அதன்பின் கண்ணோட்டம் வேண்டும்.

**சட்டத்தீர்ப்பிலே**

**மூன்று பண்புக் கூறுகள்**

சட்டத்தின்படி நீதி செலுத்த வேண்டியது அரசனுடைய கடமைதான். சட்டநூல்களில் காணும் விதிகளையும், அவ் விதிகளில் பொலியும் எழுத்துக்களையும் தொடர்களையும் புறக் கணிக்காமல் போற்றி அரசன் நீதி செலுத்த வேண்டும். என்றாலும், அவ்வாறு செய்வது சிற்சில சமயங்களில் அறம் பிழைத்தும் கண்ணோட்டம் இன்றியும் இருக்கும். சட்டத்தின் கடுமையை, கொடுமையைத், தீர்மையை, தக்கபடி மாற்றி அமைக்க வேண்டியது அரசனது கடமையாகும். அவ்விதம் செய்வதுதான் கண்ணோட்டம். நீதி, நேர்மை, நல்ல மனசாட்சி (Justice eqntiy and good courcience) என்ற மூன்று பண்புக் கூறுகளுக்கு ஏற்ப சட்டத் தீர்ப்பினை அமைக்க வேண்டும் என நீதிபரிபாலனம் செய்வதில் ஈடும் எடுப்பும் இல்லாதவர் கள் என்று போற்றப்படுகிற ஆங்கிலேயருடைய நீதிமுறை முழக்கமிடுகின்றது. அந்த ஆங்கில நீதி முறையின் குறிக் கோளையே வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே காண்ணோட்டம் என்ற அதிகாரத்தில் வலியுறுத்தியும் விளக் கியும் இருக்கிறார் என்பதை அறியும் போது, நாம் கொள்ளும் வியப்பும். உவகையும் இறுமாப்பும் சிறிதல்ல.

**பொறையுடமை அல்ல.**

கண்ணோட்டம் என்பதைப் பொறையுடமை என அழகரும் குடவரும் கருதுகின்றனர். இதனை "ஒறுத்தாற்றும் பண்பினார்" என்ற குறளுக்கும் 'பெயக்கண்டு நஞ்சுண்டு அமைவர்" என்ற குறளுக்கும் அவர்கள்கண்ட உரையால் அறியலாம். கண்ணோட்டம் பொறையுடமை அல்ல. ஒருவன் நமக்குத் தீமை செய்தால், நாம் அவனுக்குத் தீமை செய்யாது அவன் செய்த தீமையைப் பொறுத்துக்கொள்வது பொறை யுடைமை ஆகும். அரசன் நீதி வழங்கும்போது, அவன் வகுத் தருளும் தண்டத்தைக் குற்றவாளியின் பண்பாடு முதலிய வற்றிற்கு ஏற்ப அமைக்கும் அறமே கண்ணோட்டம். கண் ணோட்டம் என்ற அதிகாரத்தில் பேசப்படுவனவற்றையும் பொறையுடமை என்ற அதிகாரத்தில் பேசப்படுவனவற் றையும் ஆராய்ந்தால், கண்ணோட்டம்வேறு, பொறையுடைமை

வேறு என ஏற்படும். அறவே பொறுக்கப்பட வேண்டியதைப் பொறையுடைமையில் பேசுகிறார் வள்ளுவர். பொறையுடைமையில் அளவு இல்லை. குற்றத்தின் அளவிற்குத் தக்கபடியும், குற்றவாளிகள் நண்பர் பகைவர் நொதுமல் என்பதற்குத் தக்கபடியும் பொறையுடமை அமைய வேண்டும் என்பதல்ல. எல்லாக் குற்றத்தையும் எல்லாருடைய குற்றத்தையும் அறவே பொறுத்தல் பொறையுடைமையாம். ஆனால் கண்ணோட்டம் அளவுக்கு உட்பட்ட ஓர் அறமாகும். இதை,

"உளபோல் முகத்துஎவன் செய்யும், அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்"

"கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்துஇவ் உலகு."

என்ற குறள்களால் அறியலாம்.

## அரசனும் பொறையுடைமையும்.

ஒருவன் வேறு ஒருவன் தனக்குச் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்வதுதான் பொறையுடைமையாகும். அரசனும் ஒரு மனிதனே. மனிதன் என்ற முறையில் அரசனுக்கும் சில தீங்குகள் சிலரால் ஏற்படுவது இயல்பு. அவ்வாறு நிகழும் தீங்குகளை, மனிதன் என்ற முறையிலே அரசன் பொறுத்துக்கொள்வது சாலச்சிறந்த அறமாகும். ஆனால் ஒரு குடிமகன் வேறு ஒரு குடிமகனுக்குக் தீங்கு செய்வானாயின், அரசன் அத்தீயோனைத் தண்டிக்காது விடுவது பொறையுடைமை ஆகாது, கண்ணோட்டம் ஆகாது; அரசன் அவ்வாறு செய்தால் அவன் ஆட்சி கொடுங் கோலாகிவிடும், அவன் செயலும் வெருவந்த செயலாகிவிடும்.

## மக்களும் கண்ணோட்டமும்

அரசநீதியில் கண்ணோட்டம் இடம் பெறுவதைக் கண்டோம். அது மக்களுக்கும் ஓர் அறமாக மிளிர்வதைக் காணலாம். மக்களுக்குள் பிணக்கு ஏற்படும் போது, கண்ணோட்டம் நுழைதல் வேண்டும். அப்பிணக்கானது ஒருவனது உரிமையைக் காக்கும் கடனுடையார் அதனைக் காவாது தன் கடமையில் தவறுவதால் ஏற்படுகிறது. அந்த உரிமைக்கு நேர்ந்துள்ள ஊறின் அளவை—கடமை தவறியதால் ஏற்பட்ட பயனின் அளவை—அளக்கும் அளவையே கண்ணோட்டம். எவர் உரிமைக்கு ஊறு நேர்ந்து இருக்கிறதோ அவருடைய பொருள், பண்பாடு, அறிவுநிலை, காலநிலை முதலியவற்றிற்கும், எவர் கடமை தவறினரோ அவரது பொருள் அறிவு பண்பாடு காலநிலை குற்றத்தின் காரணம் முதலியவற்றிற்கும் ஏற்ப பரிகாரம்—நட்டஈடு (damages) அமைய வேண்டும். இவற்றை

எல்லாம் சிந்தித்து' தக்க பரிகாரம் எது என ஆராய்ந்து பழகும் பழக்கமே கண்ணோட்டம்.

**ஒப்பந்தமும் கண்ணோட்டமும்**

பிணக்கு ஏற்படுவதன் முன் இருதரத்தினரும் வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தில் கண்டிருக்கும் பரிகாரமானது அறிவிற்கும் முரண்பட்டதாயின், அதைப் பெற முயல்தல் கண்ணோட்டத்தைப் புறக்கணித்து, உரிமையை அறமும் அறிவும் அற்றதாகச் செய்வதாகும். இவ்வாறு செய்யமுயன்றான் ஷைலக் என்ற ஒரு கொடுமனத்து யூதன். ஆங்கில நாடகராசிரியரான ஷேக்ஷ்பியர் எழுதிய "வெனிஸ் நாட்டு வணிகன்" என்ற நாடகத்திலே அந்த ஷைலக் ஒரு பாத்திரம். அவனுடைய அறிவில்லா அறமில்லா அழிவழக்கினை அறமுடையதாக—கண்ணோட்டம் உடையதாக—செய்தாள் போர்ஷியா என்பவள் அல்பான்சோ என்ற வழக்கறிஞராகத் தோன்றி.

**தொகுத்துக் கூறல்**

மேலே கூறியவற்றால் கண்ணோட்டம் என்பது அரசன் செங்கோன்மை செலுத்தும் போது, அவனது தீர்ப்பைப் பெறுவதற்காக அவன் முன்னர் வரும் பல்வேறு விதமான பிணக்குகளையும் வழக்குகளையும் தக்காங்குநாடி, அறிவிற்கும் அறத்திற்கும் செம்மனத்திற்கும் ஏற்ப நீதிவழங்குவதாகும் என்பதையும், குடிமக்களும் தமக்குள் ஏற்படும் பிணக்குகளுக்கு அறிவிற்கும் அறத்திற்கும் செம்மனத்திற்கும் ஏற்றவாறு தம்பரிகாரத்தை நிர்ணயம் செய்துகொள்வதாகும் என்பதையும் அறிகிறோம்.

**சோதனை தந்த இருகுறள்கள்**

கல்வியில் ஆழ்ந்தகன்ற புலமையும் நீண்ட உலக அநுபவமும் உடைய அறிஞர்களை எல்லாம் பெரும் சோதனைக்கு உள்ளாக்கி வந்த பெருமை கண்ணோட்டம் என்ற அதிகாரத்திற்கு உண்டு, சிறப்பாக

> "ஒறுத்தாற்றும் பண்பினார்கண்ணும் கண்ணோடிப்
> பொறுத்தாற்றும் பண்பே தலை."
>
> "பெயக்கண்டு நஞ்சுஉண்டு அமைவர் நயக்கத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்"

என்ற இவ்விரண்டு குறள்களுக்கு உண்டு. இவ்விரு குறள்களின் பொருள்களை நன்கு உணராது போனதால்தான் அழகரும் குடவரும் கண்ணோட்டத்திற்குத் தவறான பொருளும் விளக்கமும் தந்தனர். இவ்விரண்டுமே கண்ணோட்டம் என்பது பொறையுடைமை, தாட்சணியம், மன்னித்தல் என்பதாகும் என அவ்விருவரையும் கருதுமாறு செய்துவிட்டன.

(தொடரும்)

**மருதி :—**

பேயனிவன் எப்படியும் பிழையே செய்வான்
பெருவிழிப்பாய்க் காரியத்தைப் பார்க்க வேண்டும்
பாயுநிறை வெள்ளத்தில் ஆட்ட னத்தி
பாய்ந்தாடும் போதவனைக் காத்தல் வேண்டும். (258)

[சிந்திக்கிருள்]

தெப்பமொன்று செய்துகரை யோரம் நின்று
தெரியாமல் காத்திருப்பேன்... நஞ்சை முன்பே
எப்படியும் பறித்துவிட வேண்டும்... தாயே
எழிலோனுக் கொருதீங்கும் இன்றிக் காக்க
முப்பொழுதும் வேண்டுகிறேன் துணைசெய் அம்மா!

[எனவணங்கி இறை நினைவோடு போராடுகிருள் அவள் போனபின் அவ்வழியே வரும் இரும்பிடர்த்தலையார் தானே பேசிக்கொள்கிருர்.]

**இரும்பிடர்த்தலையர் :—**

முடிந்தந்தது நம்வேலை இனி மன்னன் முன்பு
எப்படியும் 'ஆதி'மகள் ஆதிமந்தி
என்றசெய்தி வெளியாகா திருக்கா தின்னும் (259)

இளஞ்சேரல் அமைச்சருடன் வந்த பின்னர்
எல்லாமும் வெளியாகும்... ஆட்ட னத்தி
வளஞ்சான்ற கரிகாலன் தனக்கு வாய்த்த
மாப்பிள்ளை என்பதிலே ஐய மில்லை
விளம்பாமல் இதுவரைக்கும் இருந்தமைக்கு
வேறுபடு வானரசன்... நாளை பார்ப்போம்
உளம்போல நல்லோர்க்கிவ் வுலக மீதில்
ஒவ்வொன்றும் உண்டாகும் என்ப துண்மை (260)

[செல்லுகிருர்]

இருபத்தைந்தாம் காட்சி முடிவு.

### காட்சி 26.

நடிகர் : கரிகாலன்
பாணன்
இரும்பிடர்த்தலையார்

இடம் : பாடிவீடு
காலம் : காலை

[அரசன் இருக்கையில் வீற்றிருக்கிருன் பாணன் பண்ணிசைத்துக் கொண்டிருக்கிருன்]

பாடல்

முதனிலை

**பாணன் :—**

எண்ணி மகிழ்ந்திடுவாய்—உளமே— (எண்)

இடைநிலை

பண்ணிற்கமழ் தமிழின் வண்ணச் சிறப்பினையே (எண்)

நிறைவுநிலை

விண்ணின் முழுநிலவின் தண்மையெலாம் நிறைத்து
விரும்பி வழிபடுவோர் உள்ளத்திருள் துறக்கும்
பண்ணிற் கமழ்தமிழின் வண்ணச் சிறப்பினையே— (எண்)

கண்ணுள் ஒளிமிகுத்துக் கருத்தில் வளம்நிறைத்து
காதலிப்பார்க் கறிவின் காட்சியருள் சுரக்கும்
பண்ணிற் கமழ்தமிழின் வண்ணச் சிறப்பினையே (எண்)

**இரும்பிடர்த்தலையர் :—** [அப்பொழுது வந்து அரசனைவாழ்த்தி]

இன்றுவிழா நிறைவுறும்நாள்—ஏறத் தாழ
எல்லோரும் மகிழ்வொடுகொண் டாடி னூர்கள்
மன்றுநிறைந் தருங்கலையை மக்கள் முன்னே
மாண்பொழுகக் காட்டுகின்ற வான்க லைஞர்
சென்றபத்து நாளாக மக்க ளோடு
சேர்ந்துபல விளையாட்டிற் கலந்து கொண்டார்...

**கரிகாலன் :—**

நன்றுமிகநன்று என்ன இருந்தாலும் நம்
நடனமன்னன் ஆட்டனத்தி இதிற் கலந்து (261)

கொள்ளவில்லை என்பதொரு குறைதான் மாமா!

**இரும்பிடர்த்தலையர் :—**

குறைவில்லை வளவாஇன் றவனும் வந்து
மள்ளர்களோ டாடுவதா அறிந்தேன்—ஏனோ
மனமகிழ்ச்சி இல்லாமல் இருக்கின்றானும்...

**கரிகாலன் :—**

துள்ளிவரும் காவிரியில் நீந்துங் காட்சி
தொடங்கிவிட்டா ரன்றோநம் வீரர் எல்லாம்?

**இரும்பிடர்த்தலையர் :—**

வெள்ளமின்று சிறிது சிறிதாக ஏற
வீறுநடை போடுகின்றாள் பொன்னி நல்லாள். (262)

**கரிகாலன் :—**

வாருங்கள் மாமா நாம் சென்று காண்போம்
வளநாடு வளமேற வளவர் ஆட்சி
பாரெங்கும் சீரோங்க பல்கால் கொண்டு
பைந்தமிழார் பாநடைபோல் பரவி எங்கும்
ஏரோங்க மேழிவளம் பெருக்கு கின்ற
இயற்கைத்தாய் காவிரியின் மகிழ்ச்சி வெள்ள
நீரெங்கும் சிதருமல் நிலைபெ றுத்தி
நிலமக்கள் வேண்டும்போ தடையச் செய்யும் (263)

**இரும்பிடர்த்தலையார் :—**

திட்டத்தை அடுத்துவரும் மாசித் திங்கள்
சிறப்பாகத் தொடங்கிடுவோம்... வளவா நீரின்
மட்டமின்று கரையளவும் உயர்ந்து செல்லும்
மாண்பினைப் போய்ப் பார்ப்போம்வா ...... ......

**கரிகாலன் :—**

...... ...... ...... நன்றுமாமா
பட்டினத்தின் மாண்பினைமுன் பாலைப் பாட்டில்
பாவேந்தர் உருத்திரனர் பைந் தேனைக்
கொட்டிசிறப் பித்தைப்போல் குணஞ்சால் பொன்னிக்
கோலமெலாம் சொல்லாலே தீட்டின் ......

**இரும்பிடர்த்தலையார் :—** (முறுவலுடன்)

...... ...... ...... செய்வோம் (264)

[இருவரும் போகிறார்கள்]

இருபத்தாறும் காட்சி முடிவு.

---

## காட்சி 27.

**நடிகர் : (செவிலி) முல்லை** **இடம் : கழார் அர்த்துறைகள்**
**காலம் : மாலை**

[ஆதிமந்தியைக் காணுமல் ஊரெல்லாந் தேடி ஒடிந்த உள்ளத்தளாய் செவிலி கழார்த்துறையின் கண் தேடவருகிருள்.]

**முல்லை :—**

பட்டினத்திற் றேடாத இடமே யில்லை
பாவி என்ன செய்வேன்யான்—தேனூருத
மொட்டெனவே எண்ணிமதி கெட்டேன் சற்றும்
முறையின்றி முனிந்துகொண்டேன் மகளே! அந்தோ!
கொட்டிமகிழ்ந் திருகைகோத் தெழுவர் கூடிக்
குரவைக் கூத்தாடுகிருர்—ஐவர் அங்கே

நட்டமிட்டுப் பாடுகின்றார் அவ் விடத்தில்
நம்மகளும் ஒருவேளை இருத்தல் கூடும் (265)

அங்குசென்று பார்ப்போம்... ஆ... ஆதி யில்லை
ஐயோ!என் கண்ணேஎன் உயிரே அம்மா!
எங்குசென்றாய் ஆதிமந்தி... ஆதிமந்தீ!
என்செய்வேன் வஞ்சகியான்—கண்ணே அம்மா!
பொங்குதுயர் வெள்ளத்தில் உயிரை இன்னும்
போக்காமல் உலவுகிறேன் பாவி என்றன்
அங்கத்தை பாசந்தான் எரித்துச் சாம்பல்
ஆக்குகின்ற தரசனிடம் உடனே சென்று (266)

உன்கதையைப் பல்லோர்முன் சொல்லி உன்னை
ஒளித்துவைத்த குற்றத்திற் காக, மன்னு
என்கழுத்தை அரிந்திடெனச் சொல்வேன்... ஐயோ!
என்உயிரே பொன்மகளே! ஆதி மந்தி!

[புலம்பிக் கொண்டே]

முன்புனது கருத்தறியேன் பாவி என்றன்
மூடமதியால் தெய்வக் காதல் நெஞ்சை
வன்புரையால் புண்ணாக்கி வதைத்தேன் ஐயோ
வற்றாத அறிவூற்றே அம்மா கண்ணே (267)

[புலம்பிக்கொண்டே ஓடுகிறாள். திருப்புக் காட்சி. காவிரிக் கரைச்சோலை.]

மருதி :— [தனியே]

மூன்றெழுத்தால் முளைத்தெழுந்த பண்பே எங்கள்
முத்தமிழின் ஆற்றலெலாம் உன்பாற் கண்டேன்
சான்றவர்நல் லறிஞர்கலை வல்லார் மற்றிச்
சகத்தினிலே யாராக இருந்தா லும்உன்
ஆன்றபிடிக் குள்ளானால் நீவிரும்பின்
அழிவிப்பாய் வாழ்விப்பாய்—கொடியாய் உன்னைப்
போன்றகுணம் வேறில்லை—ஆட்டனத்தி
போன்றாரைப் பொன்றுவித்தால் ஆவதென்ன? (268)

நீயடையும் பயனென்ன? ஐயோ என்றன்
நெஞ்சுவெடித் திடுமோ? யான்என்ன செய்வேன்!
''பாயுமிந்த வெள்ளத்தில் எனது துன்பப்
பாவையைஅப் பரவையினிற் கலக்கச் செய்வேன்
தூயநறுங் காவிரிஎன் துயர்துடைப் பாள்
துறக்கத்தில் அவள்வருவாள் பெறலாம்'' என்று
வாயுடனே ஆட்டனத்தி பேசி நின்ற
வார்த்தையினுட் பொருள்...? யாதாயிருந்தா
லென்ன (269)

கட்டையினுல் தெப்பமொன்று கட்டி விட்டேன்
காவிரியின் எதிர்க்கரையில் சென்றி ருப்பேன்
துட்டன் சரத்குமரனேயோ காணேம்—ஏதும்
துன்பவனுல் நிகழந்தாலும் நிகழக் கூடும்
கிட்டிவரின் பார்ப்போம்... ஆம் கிளம்ப வேண்டும்

[அப்பொழுது ஆட்டனத்திவரத் தான் ஒருபக்கம் சென்று மறைந்திருந்து நோக்குகிருள்—ஆட்டனத்தி தனியே பிதற்றுகிருன்]

**ஆட்டனத்தி :—**

கேடில்லா நானிலத்திற் கெனே யிழந்தால்
நட்டமொன்றும் வந்துவிடா தென்னேப் போல
நடமாடும் கூத்தர்தமி ழகத்திற் கோடி (270)

செஞ்சுடரோன் மேல் நோக்கிச் செல்லுகின்ருன்
சிறிதுபொழு தாகட்டும்... பொன்னித் தாயே!
தஞ்சமென உன்பால்வந் தாடுவேன் பின்
தரையின் மீதெனேயாடும் படிச்செய் யாதே

[என்று கூறிச்செல்கிருன் அவன் சென்றபின் சரத்குமாரன் அவ்வழியே வருகிருன்]

**சரத்குமாரன் :—**

இஞ்சிதின்ற குரங்கைப்போல் இனியிருந்தால்
எண்ணியது நிறைவேரு(து) ஆதிமந்தி (ஹிஹி)
கொஞ்சத்தில் உனேவிடுவேன் என்றுமட்டும்
கொள்ளாதே உன் நினேவில்... ஆட்டனத்தி (271)

எக்கணத்தும் மடிந்துவிடச் செய்வேன்... ஆமாம் (ஹிஹி)
இத்துருத்தி என்கருவி... இன்னும்கேள் இப்
பொக்கணத்தில் மயக்கமருந் திரண்டுஞ் சேர்ந்தால்
பொன்னுலகிற் கவனே எளிதாய் அனுப்பும் (ஹிஹி)

[துருத்தியையும் நஞ்சுப் பொக்கணத்தையும் கீழேவைத்து விட்டுப் பேய்ச் சிரிப்புச் சிரித்துக் கொண்டிருக்கும்போது மருதி ஒருகல்லே எடுத்து எதிர்ப்புறத்தில் வீசவே அச்சத்தோடு எழுந்து என்ன வென்று பார்க்கச் சீறிச் செல்லுகிருன் அந்நொடிப் பொழுதில் தான் முன்பே செப்பஞ் செய்துவைத்திருந்த பொக்கணத்தை வைத்துச் சரத்குமாரன் வைத்திருந்த நஞ்சுப் பொக்கணத்தை மாற்றிவிட்டுவந்து மறைந்து கொள்ளுகிருள். அதையறியாத சரத்குமாரன் மேலே பேசுகிருன்]

செக்குலக்கைப் போலிருந்தும் அச்சம் என்னேச்
சிறிதும்விடவில்லே யினிப் போவோம் அங்கே

[செல்லுகிருன் மறைவிலிருந்த மருதி வெளிப்பட்டு]

மருதி :—

சிக்கனமா முடிந்துவிட்டது அஆ இந்தச்
சிறுமதியோன் எண்ணத்தை மறைந்திருந்து (272)
நான்முன்பே தெரிந்திருக்க வில்லை யானால்
நஞ்சுகலந் திடுவானிவ் வஞ்சன் என்னே!

[மருதி செல்கிருள் அப்பொழுது தன்னிலை மறந்தவளாய் ஆதிமந்தி அப்பக்கம் வருகிருள்]

ஆதிமந்தி :—

தேன்கசியும் சொல்லியரின் குரவைக் கூத்தும்
செந்தமிழின் பண்ணிசையும் செவிநிறைக்கும்...
ஏன்புகுந்தங் கேஅவரைத் தேடக்கூடா(து)?
எப்படியும் இன்று அவரைப்பார்த்து விட்டால்
வான்புகுந்து வாழவுளம் வருந்த மாட்டேன்
வாவாவா! என்றழைப்பேன் சாவை, ஆமாம் (273)

[மருட்சியோடு ஓடுகிருள்] திருப்புக்காட்சி

[இருவர் அவ்வழி வருகிருர்கள் அவர்களை மறித்து]

ஆதிமந்தி :—

தாரவரைப் பார்த்தீரா அய்யா?... என்றன்
தலைவரிங்கே வந்தாரோ...அவர்தா னையா...

வீரன் :— 1

யாரம்மா?

ஆதிமந்தி :— [மருட்சியோடு]

எனைத் தெரிய வில்லை நான்தான்
யாழிசைக்கும் ஆடுமகள் ... ... ... ...

வீரன் 1 :— [எள்ளலாக]

... ... ... ... அங்கு சென்று
பாரம்மா

ஆதிமந்தி :— [அடுத்தவனிடம்]

பார்த்தீரா நடன வேளை?

வீரன் 2 :—

பார்க்கவில்லை...யாரை நீ தேடுகின்ருய்?

ஆதிமந்தி :—

ஈரங்கொள் வீரர்அவர் ... ... ... ...

வீரன் 1 :— [நண்பனைப்பார்த்து இரக்கத்தோடு]

ஏஏ போவோம் ... ... ... ...

[வீரர்கள் போகிருர்கள் கையற்ற ஆதிமந்தி]

**ஆதிமந்தி :—**

எங்குவிழா அங்குசென்ருல் காணக் கூடும் (274)

[அப்பொழுது எதிரே வேலவன்வர]

ஈட்டெழிலார் என்தலைவர் எங்கே ஐயா ?
என்கணவர் எங்குள்ளார் கண்டீரா நீர்
ஆட்டனத்தி—நடமாடும் என்றன் தெய்வம்

**வேலன் :—**

அறியேன்'மா'

[வேலன் போகிருன் அப்பொழுது சரத்குமாரன் வந்து]

**சரத்குமாரன் :—**

... ... யார்யார்? ஏ! ஆதி மந்தி
மீண்டும்நான் சொல்கிறேன் ஆட்டனத்தி ... ...
வேந்தன்அவன் சேரன்இனி அவனை நம்பி
வாட்டமுரு தேயான் ... ... ... ...

**ஆதிமந்தி :—** [இடைமறித்து]

... ... சீ! வஞ்சப் பேயே!
மன்னனில்லை என் தலைவன் ஆட்டனத்தி (275)

பாணர்குலத் தோன்றலவர் உன்னை நம்பேன்
பாவிஎனை வருத்தாதே [திரும்புகிருள்]

**சரத்குமாரன் :—** [மறித்து]

... ... ... ... ... ... ஆதிமந்தி
ஆணவத்தாற் பிதற்ருதே ... ... ... ...

**ஆதிமந்தி :—** [அழுதுகொண்டே]

... ... ... ... இல்லை இல்லை
அவருமென்போல் ஆடுகள மகனே தான், போ!
வீணே நீ குழப்பாதே ... ... ... ...

**சரத்குமாரன் :—** [சிரித்து நெருங்கி]

... ... ... ... ... ... ஆதிமந்தி

[ஆதிமந்தி வெகுண்டு ஒரு பெரியக்கல்லை எடுக்கிருள் சரத்குமாரன் ஓடுகிருன் அப்பொழுது செவிலி வந்து தடுத்து அணைத்துக்கொண்டு]

**முல்லை :—**

வேண்டாம்'மா' ஆதிமந்தி கண்ணே உன்னைக்
காணுதற்கெங் கெல்லாம் அலைந்தேன்... வாம்மா
கரிகாலன் பெருமகள்நீ வாம்மா போவோம். (276)

**ஆதிமந்தி :—**
இல்லைஇல்லை ஆடுகள மகளே தான்யான்

**முல்லை :—**
இல்லையில்லை நீவேந்தன் மகளே தான்என்
சொல்நம்பு ...... ...... ......

**ஆதிமந்தி :—** [வெகுண்டு]
மாட்டேன்என் தலைவரைத்தான் ...... ......
தொடர்ந்து செல்லப் போகிறேன் ......

[போகிறாள்]

**முல்லை :—** [அவளைத்தடுத்துத் தழுவிக்கொண்டு]
...... ...... ...... ஆதிமந்தி

**ஆதிமந்தி :—**
தொல்லை யொன்றும் செய்யாதே ......

**முல்லை :—** [அழுதாற்றி]
...... கண்ணே ! அம்மா

[ஆதிமந்தி முல்லையின் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு ஓடுகிறாள். அதிர்ச்சியுற்ற முல்லை சிலையாக நின்றாள் பின் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருகிறாள் அப்பொழுது கூத்தப் பாணனும் வருகிறான்]

சோழனிடம் விரைந்துசென்று கூறவேண்டும்

**கூத்தன் :—**
முல்லை!இரு நான்என் மகனை பற்றி
முழுவிவரம் வேந்தனிடம் கூற வேண்டும் (277)

[இருவரும் போகின்றார்கள்]

இருபத்தேழாம் காட்சி முடிவு.

## காட்சி 28.

நடிகர் : இரும்பிடர்த்தலையார். சோழவீரன்
இடம் : மாடிவீட்டின் பின்புறம்
காலம் : முற்பகல்

[நம்பிக்கையும் உண்மையுள்ள சோழவீரனின் வருகையை நோக்கிநிற்கும் இரும்பிடர்த்தலையார் ஆகவேண்டுவனவற்றைச் சிந்திக்கிறார்]

**இரும்பிடர்த்தலையார் :—**
எவர்உரையும் இனிக்கேளான் ஆட்ட னத்தி
இறந்துவிட முனைகின்றான் ... சரத்குமாரன்
நவைபுரியக் காத்துள்ளான் பொறாமை யாலே;
நமன்வாயில் தானேபோய்ச் சிக்க எண்ணும்
அவனை நாம் எவ்வாறு தடுத்தல் கூடும் ?
'அருங்காதல் உணர்வே' உன் ஆடல் நன்று !



அருட்டிரு விவேகானந்த அடிகளார்.